Centre for External Degrees & Professional Learning (CEDPL)
South Eastern University of Sri Lanka (SEUSL)
University Park, Oluvil # 32360

# இணையவழி (online) விண்ணப்பித்தலுக்கான அறிவுருத்தல்கள்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (SEUSL) வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL) தனது வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான (External Degree Programmes) விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பிக்க விரும்பும் அனைவரும் கட்டாயமாக இணையவழி (Online) மூலமாகவும் தபால் மூலமாகவும் விண்ணப்பிக்க வேண்டும்.

**படிமுறை 1:** இணையவழி (Online) விண்ணப்பித்தல் (Submit Your Applicaton Online)

விண்ணப்பிக்கும் செயல்முறையின் முதல் படி இதுவாகும்.

1. **இணையதளத்திற்குச் செல்லுதல்:** முதலில் CEDPL இன் விண்ணப்பத்திற்கான உத்தியோகபூர்வ இணையதளத்திற்குச் செல்லவும்: https://cedplex.seu.ac.lk/
2. **விண்ணப்பப் படிவம்:** அங்குள்ள "Online Application" என்ற இணைப்பை அழுத்தி, இணையவழி (Online) விண்ணப்பப் படிவத்தைத் திறக்கவும்.
3. **விபரங்களை நிரப்புதல்:** படிவத்தை நிரப்பத் தொடங்குவதற்கு முன், அதில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும். உங்களது பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் போன்ற அனைத்து விபரங்களையும் பிழையின்றி துல்லியமாக உள்ளிடவும்.

**முன்னெச்சரிக்கை:** தவறான அல்லது முழுமையற்ற தகவல்களை வழங்கினால், உங்களது விண்ணப்பம் உடனடியாக நிராகரிக்கப்படும்.

**படிமுறை 2:** தேவையான ஆவணங்களைத் தயாரித்தல் (Prepare Required Documents)
இணையவழி (Online) விண்ணப்பத்தில் சில ஆவணங்களை நீங்கள் பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

**ஆவணங்களுக்கான முக்கிய விதிகள்:**

- அனைத்து ஆவணங்களும் தெளிவாக ஸ்கேன் (Scan) செய்யப்பட்டிருக்க வேண்டும் (கைபேசியில் ஸ்கேன் (Scan) செய்யும்போது நிழல் அல்லது மங்கலாக இல்லாமல் பார்த்துக் கொள்ளவும்).
- ஆவணங்கள் அனைத்தும் PDFவடிவில் இருக்க வேண்டும்.
- ஆவணங்களின் பிரதிகள் அனைத்தும் சமாதான நீதவான் (JP) அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் (Certified Copies) வேண்டும்.

**பதிவேற்ற வேண்டிய ஆவணங்கள்:**

1. **தேசிய அடையாள அட்டை (NIC):** உறுதிப்படுத்தப்பட்ட பிரதி,
2. **பிறப்புச் சான்றிதழ் (Birth Certificate):** உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
3. **உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சாதாரண தர - O/L)** சான்றிதழின் பிரதிகள்.
4. **உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உயர் தர - A/L)** சான்றிதழின் பிரதிகள்.
5. **ஏனைய தகுதிகள்:** நீங்கள் விண்ணப்பிக்கும் படிப்புக்குத் தேவையான பிற கல்வி அல்லது தொழில்முறைச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (தேவையேற்படின் மட்டும்).
6. **பணப் பற்றுச்சீட்டு:** விண்ணப்பக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை அல்லது இணையவழி(Online) பற்றுச்சீட்டின் ஸ்கேன் (Scan) பிரதி (விபரங்கள் கீழே படிமுறை 3 இல் உள்ளன).

**படிமுறை 1:** விண்ணப்பக் கட்டணம் செலுத்துதல் (Payment of Application Processing Fee)

விண்ணப்பச் செயலாக்கக் கட்டணம் ரூபாய் 1,500.00 ஆகும். இதனை செலுத்த இரண்டு வழிகள் உள்ளன:

**வழிமுறை 1:** மக்கள் வங்கியில் (People's Bank) செலுத்துதல்.
மக்கள் வங்கியின் ஏதேனும் ஒரு கிளைக்குச் சென்று, பணம் செலுத்தும் படிவத்தை (Pay-in Voucher / Bank Slip) பயன்படுத்தி கீழ்காணப்படும் கணக்கிலக்கத்திற்கு பணத்தைச் செலுத்த வேண்டும்:

1. **கணக்கு வைத்திருப்பவர் பெயர்** (In favor of): Bursar, South Eastern University of Sri Lanka)
2. **கணக்கு எண்** (Account Number): 228-1001-6000-1692
3. **கிளை** (Branch) - Addalaichenai

**வழிமுறை 2:** இணையவழி போர்டல் (Online Portal) GovPay மூலம் செலுத்துதல்.
அரசாங்கத்தின் GovPay இணையவழி (Online) கட்டண நுழைவாயில் (Online Payment Portal) மூலமாகவும் நீங்கள் இந்த **1,500** ரூபாயைச் செலுத்தலாம்.

**முக்கிய குறிப்பு:** பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது இணையவழி (Online) கட்டண பற்றுச்சீட்டை பாதுகாப்பாக வைக்கவும். அதன் ஸ்கேன் (Scan) பிரதியை இணையவழி பதிவேற்ற வேண்டும்.

**படிமுறை 4: பிரிண்ட் செய்தல் மற்றும் தபாலில் அனுப்புதல்** (Print and Submit Hard Copies)
இணையவழி (Online) விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பிறகு அதன் பிரதியை தபாலிலும் அனுப்ப வேண்டும்.

1. **பதிவிறக்கம் செய்தல்:** இணையவழி படிவத்தைச் சமர்ப்பித்த பின், பூர்த்தி செய்யப்பட்ட உங்களது விண்ணப்பப் படிவம் PDF வடிவில் உங்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் (EMAIL) முகவரிக்கு அனுப்பப்படும். அவ் விண்ணப்ப படிவத்தினை தரவிறக்கம் செய்து, அதனை பிரிண்ட் (PRINT) செய்து கொள்ளவும்.

2. **ஆவணங்களை இணைத்தல்:**
   a. பிரிண்ட் செய்யப்பட்ட படிவத்துடன், நீங்கள் இணையவழி(Online) பதிவேற்றிய அனைத்து உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகளை (Photocopies) இணைக்கவும்.
   b. வங்கியில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டை (Original Payment Receipt / Bank Slip) அதனுடன் இணைக்க வேண்டும் (உங்களிடம் பிரதி ஒன்றை வைத்துக் கொள்ளுங்கள்).

3. **தபாலில் அனுப்புதல்:** முழு விண்ணப்ப படிவத்தையும் ஒரு உறையிலிட்டு, அறிவிக்கப்பட்ட இறுதித் திகதிக்கு முன்பாகவோ அல்லது அன்றைய தினமோ வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் (CEDPL) கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் (Registered Post) அனுப்ப வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

Senior Assistant Registrar
Centre for External Degrees and Professional Learning (CEDPL),
South Eastern University of Sri Lanka,
University Park,
Oluvil,
Sri Lanka.

**மிக முக்கியமான குறிப்புகள் (Important Notes)**

- இறுதித் திகதிக்குப் பிறகு கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- எதிர்காலத் தேவைகளுக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் ஒரு நகல், ஆவணங்களின் நகல்கள், வங்கியின் பற்றுச்சீட்டு நகல் மற்றும் பதிவுத் தபால் பற்றுச்சீட்டு (Postal Registration Receipt) ஆகியவற்றை உங்களிடம் பத்திரமாக வைத்திருங்கள்.
- உங்களது தகைமைகள் குறித்து ஏதேனும் தவறான அல்லது போலியான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால், உங்களது விண்ணப்பம் எந்த நேரத்திலும் உடனடியாக ரத்துச் செய்யப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள்** (Contact Information)
விண்ணப்பிக்கும்போது ஏதேனும் சந்தேகங்கள் அல்லது தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஏற்பட்டால் CEDPL நிலையத்தை நேரடியாகத் தொடர்புகொள்ளவும்:

**முகவரி:**
Director,
CEDPL,
South Eastern University of Sri Lanka,
University Park,
Oluvil – 32360,
Sri Lanka.

தொலைபேசி எண்: +94 67 205 2801 மின்னஞ்சல் முகவரி: cedpl@seu.ac.lk

# Instructions for Online Application

The Centre for External Degrees and Professional Learning (CEDPL), South Eastern University of Sri Lanka (SEUSL), invites applications for admission to its External Degree Programme. All applicants are required to complete the application process through the Online Application System.

**Step 1 – Submit Application Online**

Applicants should visit the CEDPL website and complete the online application form through the " Online Application" link: https://cedplex.seu.ac.lk/

Carefully read all instructions before completing the application. Ensure that all information provided is accurate and complete. Incorrect or incomplete information may result in the rejection of the application.

**Step 2 – Prepare the Required Documents**

The following documents must be scanned clearly and uploaded to the online application system in PDF format.

1. Certified copy of the National Identity Card (NIC)
2. Certified copy of the Birth Certificate
3. Certified copies of G.C.E. (O/L) Certificates
4. Certified copies of G.C.E. (A/L) Certificates
5. Certified copies of all other relevant educational and/or professional qualifications (where applicable)
6. Scanned copy of the application processing fee payment receipt

Important:

- All documents must be clearly legible.
- Upload each document in PDF format.
- Applications submitted without the required supporting documents will not be considered.

**Step 3 – Payment of the Application Processing Fee**

The Application Processing Fee is LKR 1,500.00.

The fee may be paid by either of the following methods:

Option A: Pay at any branch of People's Bank using a Pay-in Voucher in favour of:

Bursar
South Eastern University of Sri Lanka
Account Number: 228-1001-6000-1692 (Addalaichenai Branch)
Option B: Make the payment through the GovPay Online Payment Portal.
The payment receipt must be uploaded with the online application.

**Step 4 – Print and Submit Hard Copies**
After successfully submitting the online application:

- Download and print the completed online application form sent to your email.
- Attach certified photocopies of all supporting documents submitted online.
- Attach the original payment receipt or a copy of the payment slip.

Send the complete application package by Registered Post to reach the following address on or before the prescribed closing date:

Senior Assistant Registrar
Centre for External Degrees and Professional Learning (CEDPL)
South Eastern University of Sri Lanka
University Park
Oluvil

Telephone: +94 67 205 2801
Email: cedpl@seu.ac.lk
Website: https://www.seu.ac.lk/cedpl/

Important Notes

- Submission of the online application alone does not complete the application process.
- The printed application together with certified supporting documents must also be submitted by Registered Post.
- Applications received after the closing date or incomplete applications will not be considered.
- The University reserves the right to reject incomplete, inaccurate, or late applications without prior notice.
- Applicants are advised to keep copies of the completed application form, uploaded documents, payment receipt, and postal registration receipt for future reference.
- Any false or misleading information furnished by an applicant may result in the cancellation of admission at any stage.